# **OS.No.188/2024, Dated 21.10.2024**

The witness sworn under Oaths Act 1969 on this the 21st day of October 2024

**வா.சா.1 - பட்டாபிராமன் த/பெ சேஷரத்தினம் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் எஸ்.எஸ்.எல்.சி வரை படித்துள்ளேன். நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஒய்வு பெற்றேன். 1981 ஆம் ஆண்டு கிராம நிர்வாக அலுவராக பணி உயர்வு பெற்றேன். நான் திருப்பனமூரில் முதலில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். நான் தேசூர் அருகில் உள்ள மகமாயி திருமணி ஊரில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றேன். நான் எப்போதும் கிராம நிர்வாக அலுவலராக செப்டாங்குளத்தில் பணிபுரிந்ததில்லை. செப்டாங்குளத்தை சார்ந்த தனபாலை எனக்கு தெரியும். அவர் எனது நண்பர் ஆவார். நான் தற்சமயம் தாழம்பள்ளத்தில் வசிக்கிறேன். நான் பாண்டின் பேரில் கடனாக கொடுத்த தொகையை திருப்பி கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.1 தான் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டு ஆகும். கடனுறுதி சீட்டான வா.சா. 1 ஐ பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து எழுதிக்கொடுத்தார்கள். பிரதிவாதிகள் விவசாயத்திற்காக அவர்கள் வாங்கிய டிரக்கை ஜப்தி செய்ய இருப்பதால் அதை மீட்க கடன் கேட்டார்கள். டிரக்கை மீட்பதற்கு முதலில் ரூ.2,00,000/- வாங்கி சென்றார்கள். பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து தான் வாங்கினார்கள். முதலில் அந்த பணத்திற்கு அவர்கள் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. நம்பிக்கையின் பேரில் தான் கொடுத்தேன். பிரதிவாதிகளின் தகப்பனார் கேட்டு தான் நான் அந்த பணத்தை கொடுத்தேன். அதன்பின்னிட்டு பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் இருந்து பணம் வாங்கினேனா என்றால் இல்லை. ரூ.2,00,000/-க்கு நான் அசலும், வட்டியும் பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் கேட்டேன் என்றால் சரிதான். ரூ. 2,00,000/- கடன் வாங்கியது குறித்து என்னுடைய பிராமாண வாக்குமூலத்தில் நான் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 28.07.2011 அன்று எனது மனைவி பெயரில் பிரதிவாதிகளிடம் இருந்து சொத்து வாங்கினேனா என்றால் இல்லை. 1980 ஆம் வருடம் தான் பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் இருந்து நிலம் வாங்கினோம். ஒரு ஏக்கர் எவ்வளவு என்று பேசப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய மனைவி உடையது தான். எவ்வளவுக்கு கிரையம் வாங்கினோம் என்று ஞாபகம் இல்லை. கிரையம் வாங்கியதற்கு எனது மனைவி பணம் கொடுக்கவில்லை என்றாலும் நான் தான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த கடனுக்கு தான் அந்த நிலத்தை

பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் இருந்து எழுதி வாங்கினேன். 23.10.1980 ஆம் தேதியில் எனது மனைவி பெயரில் பிரதிவாதிகளின் தந்தையிடம் இருந்து நிலத்தை வாங்கினேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார். |

ஓம்/- எஸ்.சரண்யா
சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.